
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



கையெடுத்துக் கும்பிட்டுக் காணவரும் பக்தருக்குக்
கைகொடுத்துக் காப்பாற்றும் கண்ணுடைய நாயகியே!
நையாமல் கல்விதந்த நகரத்தார் மாணவர்க்கே
எய்தரிய கல்லூரி இடம்கிடைக்கச் செய்வாயே

ஜூன் 1992



மத்திய அரசின் வணிகத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் 19–4-92 அன்று பிள்ளையார்பட்டிக்கு வருகை தந்தபோது எடுத்த படம். அருகே காரியக்காரர்கள் திரு. ஆர் எம். பி. ஆர் எம். பி. முத்தையா, திரு. ராம. ஆதப்ப செட்டியார், திரு. மெய்யப்ப செட்டியார், திரு. ஏ எல். பெரிய கருப்பன்.



தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் 28-3-92 அன்று பிள்ளையார்பட்டிக்கு வருகை புரிந்தபோது எடுத்த படம். அருகே அமைச்சர் நாகூர் மீரான் அவர்கள் கற்பகம் எம்.எல்.ஏ., பிள்ளையார் பட்டிக் கோவில் காரியக் காரர்கள் திரு. ஆர் எம். பி. ஆர் எம். பி. முத்தையா திரு. ராம. ஆதப்ப செட்டியார் மற்றும் நகரத்தார்கள்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 5

ஆங்கிரஸ
வைகாசி

ஜூன்
1992

காணிக்கு வாய்த்த மகராசி - தெய்வக்
கன்னிச்சி ஞானக் கருமறத்தி
மாணிக்கச் செட்டிச்சி கண்ணாத்தாள் - இந்த
வையமெல் லாம்பெற்ற மாதாவடி
— (முத்துக்குட்டிப் புலவர் (கண்ணுடையம்மன் பள்ளு)

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00





அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மனுக்கு தங்க அங்கி அணிவிப்பு விழா


சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த நாட்டரசன் கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மனுக்குத் தங்க அங்கி அணிவிப்பு விழா 12-5-92 அன்று சிறப்பாக நிகழ்ந்தது.

இதனை முன்னிட்டு 11-5-92 மாலை நவசண்டி ஹோமமும் 12-5-92 மாலை பூர்ணகுதியும் ஹோமத் தீர்த்த அபிஷேகமும் சிறப்பாக நிகழ்ந்தன.

தங்க அங்கி அணிவிப்பை யொட்டி 12-5-92 மாலை திருக்கோவிலின் மைய மண்டபத்தில் விழா நடைபெற்றது. மேற்படி விழாவிற்கு கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை வகித்தார்கள்.

தங்க அங்கிக் குழுத் தலைவர் திரு. ஜி. ஆறுமுகம் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தியபோது 1968ல் தொடங்கிய இத் திருப்பணி 24 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் துலாவூர் ஆதீனத் தலைவர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் சிவகங்கை சமஸ்தானம் இளைய பரம்பரை அறங் காவலர் — காப்பாளர் இராஜகுமாரி திருமதி இராஜலட்சுமி இரகுராஜ் அவர்கள், கா. செ. மடாலயத் தலைவர் தவத்திரு சிவஞான சுவாமிகள், தத்புருஷதேசிகர் பாலகவி



சேலத்தில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் உடல் ஊனமுற்ற மாணவர் திரு. மாரியப்பனுக்கு மூன்று சக்கர வண்டியை சேலம் ஜவஹர் மில்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. பழ. இராமநாதன் வழங்குகிறார். அருகே திரு. கண்மணி சுப்பு, திரு. வீர. இராமநாதன் அமைச்சர் திரு. செல்வகணபதி, திரு. முக்தா சீனிவாசன்.

திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே ஆர். முருகானந்தம், திரு. ஏ எல். ஏ ஆர். சோம. நாராயணன் செட்டியார் திரு. இராம. சேது நாராயணன் செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. வாழ்த்துரை வழங்கியபோது 6 மாதமே இருக்கும் தென்னை மட்டை தென்னை மரத்தில் தழும்பை ஏற்படுத்துவதாகவும் சுமார் ஆயிரம் பவுன்களில் தங்க அங்கி செய்து அணிவித்திருப்பது மாபெரும் சாதனை என்றும் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குவதாகவும் குறிப்பிட்டார்.

தத்புருஷ தேசிகர் அவர்கள் வாழ்த்துரை வழங்கியபோது "24 ஆண்டுகள் கர்ப்பத்தில் இருந்த குழந்தை இன்று தங்க அங்கிக் குழந்தையாகப் பிறந்திருக்கிறது" என்றார்கள்.

தொடர்ந்து இராணி அம்மையாருக்காக சிவகங்கை தேவஸ்தான மேலாளரும் சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே ஆர். முருகானந்தமும் முன்னாள் துணை வேந்தர் திரு. இராம. சேது நாராயணனும் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் இராணி அம்மையாருக்கு திரு பெரி அரு. கண. இராமசாமிச் செட்டியாரின்

துணைவியார் திருமதி கோமதி ஆச்சி பொன்னுடையும் மலர் மாலையும் அணிவித்தார். நகரத்தார் சார்பாக தங்க அங்கிக் குழுவின் தலைவர் திரு. ஜி. ஆறுமுகம் செட்டியார் வெள்ளிக் குத்து விளக்கு ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினர்.

தொடர்ந்து தங்க அங்கியை அழகுறச் செய்த காரைக்குடி திரு. நாச்சியப்ப ஆசாரி, பீடம் அமைத்த திரு கிருஷ்ணன் மற்ற தொழில் நுட்பக் கலைஞர்கள் சிறப்பு விருந்தினர்கள் பொன்னுடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப் பெற்றனர்.

சிவகங்கை வழக்கறிஞர் திரு. என் கணபதி சுப்பிரமணியத்தின் துணைவியார் திருமதி மஞ்சுளா தயாரித்த கண்ணுடையம்மன் பள்ளு ஒலிப் பேழையை இவ்விழாவில் இராணி அம்மையார் வெளியிட திரு. ஜி. ஆறுமுகம் செட்டியார் பெற்றுக் கொண்டார்.

தங்க அங்கி செய்யும் பணிகளை ஆறு மாத காலமாகப் பொறுப்போடு கவனித்து வந்த நா. கோட்டை திரு. கண. அண்ணாமலை செட்டியாரின் சேவையைப் பாராட்டி அவருக்கு இவ்விழாவில் ஒரு பவுன் தங்கம் பரிசாக அளிக்கப் பெற்றது. அத் தங்கத்தை அவர் பெற்று, அங்கேயே தங்க அங்கிக் குழுவிற்கு நன்கொடையாக அளித்தார்.

தங்க அங்கிக் குழுவின் தலைவர் திரு. ஜி. ஆறுமுகம் செட்டியாருக்கு இத் திருக்கோவிலின் கௌரவக் கண்காணிப்பாளர் திரு. பெரி. அரு. கண. இராமசாமிச் செட்டியார் பொன்னுடையும் மாலையும் அணிவித்தார்.

கணக்காய்வாளரும் தங்க அங்கிக் குழுவின் பொருளாளருமான திரு. ஒய். சத்தியமூர்த்தி நன்றி கூறினர்.

இவ் விழாவில் ஆயிரக்கணக்கான நகரத்தார்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு கண்ணுடையநாயகி அம்மனை வழிபாடு செய்தனர்.

நகரத்தார் இளைஞர் சங்கம்

மதுரை

நகரத்தார் நலனில் அக்கறையுடையவரும் நீண்ட காலம் தொடர்ந்து நகரத்தாருக்குத் தொண்டாற்றி வருபவருமான எங்களது செயலாளர்

வழக்கறிஞர்

திரு. பழ. இராமசாமி B,A., B.L. (M.L.) க்கும்

(மேலைச்சிவபுரி திரு. இராம. பழநியப்ப செட்டியார் அவர்களின் புதல்வர்)

செல்வி: ஜானகி என்கிற **ஷீலா**விற்கும்

(விரையாச்சிலை திரு. மீ. சிதம்பரம் செட்டியார் அவர்களின் புதல்வி)

விரையாச்சிலை மணமகள் இல்லத்தில் நாளது ஆங்கிரஸ ஆண்டு வைகாசித் திங்கள் 29ஆம் நாள் (11—6—1992) வியாழக்கிழமை காலை 9-30 மணி முதல் 10-30 மணிக்குள் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கும் 14—6—1992 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிமுதல் 8-00 மணிக்குள் **மதுரை, 178-B, காமராஜர் சாலையில் உள்ள மதுரை - இராமநாதபுரம் வணிகக் கழகக் கட்டிடத்தில்** நடைபெறவிருக்கும் திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலும் அனைவரும் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பிக்க வேண்டுகிறோம்

தங்களன்புள்ள,

இரா. சொக்கலிங்கம்

தலைவர்

மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்,

நகரத்தார் இளைஞர் சங்கம், மதுரை

எஸ். தங்கமணி வெளிநாடு பயணமானார்

நமது இதழின் துணையாசிரியர் திரு. எல். சுந்தரத்தின் புதல்வரும் கோவை ஸ்டாண்டர்டு பேப்பர் ஸ்டோர்ஸ் நிர்வாகப் பங்காளர் திரு. எஸ். நாகப்பன் அவர்களின் மாப்பிள்ளையுமான திரு. எஸ். தங்கமணி பணியின் நிமித்தம் மத்திய ஆப்பிரிக்காவில்உள்ள ரிவாண்டா நாட்டிற்கு 14-5-92 அன்று கோவையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றார். விமான நிலையத்தில் அவரை உறவினர்கள். நண்பர்கள் வழியனுப்பி வைத்தனர்.

பிரபல திருமணம்

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட் நிர்வாக இயக்குநர் திரு. இராம. அருணசலம் செட்டியார் அவர்களது புதல்வி செல்வி மெய்யம்மை என்கிற விஜயா B. A.க்கும் தேவகோட்டை திரு. சேவு. லெ. ராம. நா. ராம. லெட்சுமணன் செட்டியார் (ஒயிட் அன் கோ, கோவை) அவர்களது புதல்வன் செல்வன் வெள்ளையன் B.E.க்கும் 14-5-92 அன்று பள்ளத்தூர் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமண விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கலா மடம் - பாதரக்குடி ஆதீனத் தலைவர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள், துலாவூர் ஆதீனத் தலைவர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் பள்ளத்தூர் அருள்நந்தி ஆசிரமம் தவத்திரு வி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார், ஆலை அதிபர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள். அதிகாரிகள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணம்

அனைத்து நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கம் பிள்ளையார்பட்டியில் நடத்தி வரும் அடுத்த கூட்டுத் திருமணம் ஆங்கிரஸ ஆண்டு ஆவணித் திங்கள் 21ஆம் நாள் (6—9—1992) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாகவும் அத்திருமணத்தில் பங்கு பெற விரும்பும் திருமண வீட்டார்கள் அதற்குரிய படிவங்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்று நிறைவு செய்து 5—7—!992க்குள் அனுப்பி வைக்குமாறும் அச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

செயலாளர், நகரத்தார் சங்கம்,
2, ஒத்தமால் தெரு.
திருச்சிராப்பள்ளி-620 002
தொலைபேசி எண் : P. P. 23318

'நீலகண்டன்' என்ற பெயர் எப்படி வந்தது ?

பாற்கடலில் மந்தர மலையை மத்தாக வைத்து வாசுகி எனும் பாம்பை கயிருகக் கொண்டு அமுதம் கடைந்தபோது முதலில் பாம்பின் விஷம் வருகிறது. அரக்கர்கள் எல்லோரும் ஓடிவிடுகிருர்கள். தேவர் கள் ஓட முடியாமல் தவிக்கிருர்கள். நச்சிலிருந்து அவர்களைக் காக்க சிவபெருமான் நஞ்சைக் குடிக்க வாயைத் திறக்கிருர். பார்வதி தேவி 'நம் கணவர் விஷம் உண்டால் என்ன ஆவார் ?' எனப் பயந்து வேக மாக ஓடி வந்து குரல்வளையைப் பிடிக்கிருர். விஷம் கண்டத்திலேயே (கழுத்து) தங்கி சிவனின் கழுத்து நீல நிறமாக ஆகிவிடுகிறது. அதனல்தான் அவருக்கு 'நீலகண்டன்' எனப் பெயர் ஏற்பட்டது. இதிலிருந்து கணவனின் கழுத்தை (மென்னியை) அன்றே மனைவி பிடித்திருக்கிருள் என்று தெரியவருகிறது. இன்று யாருக்காவது பிரச்னை என்ருல் யோசிக்க வேண்டாம். அன்னை பார்வதி தேவியே வழிகாட்டியிருக்கிருள்.

— புலவர்மாமணி மா. முத்துராமன்

(ஆ. முத்துப்பட்டணம் அருள்மிகு லோகநாயகி அம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டு விழாவை ஒட்டி 8-5-92 அன்று நடைபெற்ற வழக்காடு மன்றத்தில்)

திருமணங்கள்

நாட்டரசன்கோட்டை திரு. சுப. யெ. சுப. நா. லெட்சுமணன் செட்டியார் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் பி.ஏ க்கும் மேற்படி ஊர் திரு. சி. கரு. நா. வயி. வ பிரவன் செட்டியார் புதல்வி செல்வி சாந்திக்கும் —

மேற்படி திரு. லெட்சுமணன் செட்டியார் புதல்வி செல்வி ஈஸ்வரிக்கும் மேற்படி திரு. வயி ரவன் செட்டியார் புதல்வன் செல்வன் ரவிச்சந்திரனுக்கும் 30-4-92 அன்று மணமகள் இல்லங்களில் திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

ஒக்கூர் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவில்

ஒக்கூர் நகரத்தார்கள் கூட்டம் 3-5-92 அன்று காலையில் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவிலில் நடைபெற்றது. அப்போது ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவிலின் நித்திய பூஜைச் செலவுகளுக்குப் பாக்கி உள்ள புள்ளி வரிகளை வசூலிப்பது என்றும் புதிதாக புள்ளி ஒன்றுக்கு புள்ளி வரியாக ரூ. 500 – வீதம் டெபாசிட் பெறுவது என்றும் முடிவு செய்யப் பெற்றது.

மேலும் மேற்படி கோவிலைப் புதிதாகத் திருப்பணிசெய்து திருக்குட நன்னீராட்டுச் செய்வது என்றும் அதனை ஒட்டி சிறப்பு மலர் வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

திருப்பணிக் குழு

மேற்படி திருப்பணிக் குழுவின் தலைவராக சிக, அரு. க. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்களும் துணைத் தலைவர்களாக் திரு. சி. கரு. கண. இராமநாதன் செட்டியாரும் திரு. சி. கரு. சிந. கரு. ஆதப்ப செட்டியாரும் செயலாளர்களாக திரு. நா. சா. இராமநாதனும் திரு. செ. கண. சே. கண்ணப்ப செட்டியாரும் பொருளாளராக திரு. மு. சே. ரெ. சேக்கப்பனும் குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் சி. கரு, சி. ராம. கரு. கரு ஆதப்ப செட்டியார், சி. கரு. ஆ. கரு. ஆ. கருப்பஞ்செட்டியார், சி. கரு. ஆத. கரு. வெள்ளையப்ப செட்டியார், வீர. ராம. சித. ராம. வ. சிதம்பரம், அரு. சித. அரு. சிதம்பரம் ஆகியோரும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

மலர்க் குழு

மலர்க் குழுவிற்கு திரு. சி. சித. அண்ணாமலை செட்டியார் தலைவராகவும் திருவாளர்கள் சிக அரு. சோம. இராம. சோமசுந்தரம் செட்டியார். சி. லெ. சிந. இராமநாதன் செட்டியார், நா. லெ. சுந்தரம், சி. கரு. கண. இராம. கண்ணப்பன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.



எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

12

வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பாபிஷேகம்

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு 1877-ல் ஏழு கோவில் நகரத்தார்கள் தம் பொறுப்பில் கும்பாபிஷேகம் நடத்தி இருக்கிறார்கள். அதே போன்று தேவகோட்டை முத்து கரு. கு. வெ. அழகப்ப செட்டியார் அவர்கள் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் கௌரவ ரிசீவராகத் தொண்டு புரிந்து வந்ததோடு, 1-7-1923-ல் இத்திருக்கோவிலின் கும்பாபிஷேகத்தை நடத்தியிருக்கிறார். 28-8-1963ல், திரு. பி. டி. ஆர். தலைமையில் அமைந்த திருப்பணிக் குழுவும் 26-6-1974-ல், திரு. லெ. நா. அவர்கள் தலைமையில் இருந்த அறங்காவலர் குழுவும் கும்பாபிஷேகத்தை நடத்தியிருக்கிறார்கள்.

1877-ல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவைப்பற்றி 'தமிழ்த் தாத்தா' உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் நினைவு மஞ்சரி முதற் பாகத்தில் எழுதியுள்ள விவரமாவது :-

சென்ற ஈசுவர வருஷம் (1877) மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தினர் லட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டுத் திருப்பணி செய்வித்தார்கள். கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மதுரைக்கு அக்காலத்தில் வந்த மக்கள் கூட்டம் கணக்கில் அடங்காது. காசி முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள இடங்களிலிருந்து லட்சக்கணக்கானவர்கள் வந்திருந்தனர். திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், தனவைசியர்களுடைய அழைப்பிற்கு இணங்கித் தம்முடைய பரிவாரங்களுடன் வந்திருந்தார். அவர்களோடு வந்தவர்கள் 500 பேர்களுக்கு மேல் இருக்கும். திருவாவடுதுறை ஆதீனத்தில் அப்போது சின்னப் பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரும் கல்லிடைக்குறிச்சியி



அமராவதி புதூர்
வயிநாகரம் நாகப்ப அய்யா



அமராவதி புதூர் வயிநாகரம்
வெங்கடாசல அய்யா

லிருந்து வந்திருந்தார். அக்காலத்தில் நான் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்டுக் கொண்டும், திருவாவடுதுறை மடத்தில் உள்ளவர்களுக்குத் தமிழ்ப்பாடஞ் சொல்லிக் கொண்டும் இருந்தேன். ஆதலின் நானும் தேசிகருடன் மதுரை சென்றிருந்தேன்.''

''அக்காலத்தில் மதுரையில் கலெக்டராக இருந்த க்ரோல் துரை என்பவர் (நகர சபைக் கமிஷனர்) மணி ஐயருடைய பெருமையை நன்கு அறிந்து அவரிடம் மிக்க அன்பு பாராட்டி வந்தார். மதுரைத் திருக்கோவிலைச் சுற்றியுள்ள மதிலுக்கு வெளியில் பல மக்கள் குடிசைகள் கட்டிக் கொண்டிருந்தனர். சிலருடைய வீடுகளும் இருந்தன. அவர்களால் பலவகை அசுத்தங்களும் உண்டாயின. அக்கோவிற் கும்பாபிஷேகம் செய்வித்த அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த நால்வருள் ஒருவராகிய வெங்கடாசலஞ் செட்டியார் அது கண்டு மனம் வருந்தினார். நிவர்த்தி பண்ணுவதற்கு முயன்று பார்த்தார். அவரால் இயலவில்லை. மணி ஐயர் மிக்க இரக்கமும் அன்பும் உடையவரென்பதை அறிந்து அவரிடம் சென்று, ''திருமதில் சிவபெருமான் வடிவமாயிற்றே! அதைச் சுற்றி மக்கள் அசுத்தம் செய்கிறார்களே! இதைக் காண எனக்கு மனம் பொறுக்கவில்லை. நீங்கள் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்று முறையிட்டு வந்தார்.

''மணி ஐயர் அவர் கூறுவதன் உண்மையையும் அவருடைய சிவபக்தியையும் உணர்ந்தார். உடனே க்ரோல்

தமிழ்நாட்டில் தங்கத் தேர் உள்ள திருக்கோவில்கள் !

1.	பழநி	—	தண்டாயுதபாணி சுவாமி கோவில்
2.	திருத்தணி	—	சுப்பிரமணிய சுவாமி கோவில்
3.	திருச்செந்தூர்	—	சுப்பிரமணிய சுவாமி கோவில்
4.	சமயபுரம்	—	மாரியம்மன் கோவில்
5.	மதுரை	—	மீனாட்சியம்மன் கோவில்
6.	திருவேற்காடு	—	கருமாரியம்மன் கோவில்
7.	சுவாமிமலை	—	சுவாமிநாத சுவாமி கோவில்
8.	வடபழநி	—	வடபழநியாண்டவர் கோவில்
9	சங்கரன்கோவில்	—	சங்கர நாராயண சுவாமி கோவில்
10.	காஞ்சிபுரம்	—	காமாட்சியம்மன் கோவில்
11.	கந்தகோட்டம்	—	முத்துக்குமாரசுவாமி கோவில்
12.	ரத்னகிரி	—	பாலமுருகன் கோவில்

நன்றி : மணிவாசகர் பதிப்பகம்
வெளியிட்டுள்ள ''மதுரை''

நம்முடைய பெண்கள் வல்லவர்கள் !

நம்முடைய பெண்கள் சொல்லிலும் செயலிலும் எப்போதுமே ஆடவர்களைவிட வல்லவர்கள். வீட்டிற்கு, வெளியாட்கள் யாரும் வந்து ''அவர்கள் இருக்கிறார்களா?'' என்று கேட்டால் ''பிள்ளைக்கு அப்பச்சியா? அவர்கள் வெளியே சென்றிருக்கிறார்கள்'' என்று நாகரிகமாகச் சொல்வார்கள்.

நாலு முள வேட்டி கிழிந்து போனால் அதை இட்லித் துணியாகப் பயன்படுத்துவார்கள்.

பாவாடை கிழிந்து போனால் அதைத் தம் வீட்டில் உள்ள அழகிய தூண்களில் சுற்றி வைத்து அழுக்குப் படாமல் பார்த்துக் கொள்வார்கள்.

'பேண்ட்' கிழிந்து போனால் அவற்றைச் சிறு சிறு பைகளாக தைத்துப் பயன்படுத்துவார்கள்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(பள்ளத்தூரில் ஒரு படைப்பு விழாக் கருத்தரங்கில்)


துரையினுடைய உதவியைப் பெற்று வயிநாகரத்திடம் பணம் பெற்று மதிற்புறத்தே இருந்தவர்களுக்கு வேறிடங்கள் வாங்கித் தந்தும், வீடு கட்டப் பணம் உதவியும் நிலத்துக்கு விலை தந்தும் அவர்களைத் திருப்திப்படுத்தினார். பின்னர் வசதியான இடங்களிலே அவர்களைக் குடியேற்றிப் பாதுகாத்தார். அப்பால் திருமதிலைச் சுற்றி நந்தவனம் அமைக்கச் செய்தார். அதைப் பாதுகாக்க அதைச் சுற்றி இரும்பு கிராதியால் ஒரு வேலி போடச் செய்தார் அந்த நந்தவனம் இன்றும் சிறப்பாக விளங்குகின்றது. கோவிலும் நந்தவனமும் சேர்ந்துள்ள அமைப்பு ஒரு பெரிய புஷ்பத் தோட்டத்தின் மத்தியில் அவ்வாலயம் இருப்பது போலத் தோன்றும். வயிநாகரம் உதவியுடன் அமைந்த நந்தவனத்தைக் கண்டு சிவநேசச் செல்வர்கள் யாவரும் மனம் குளிர்ந்தார்கள். வெங்கடாசலம் செட்டியார் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டார்.

— இவ்வாறு 'தமிழ்த் தாத்தா' உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(வளரும்)

திருமணம்

பலவான்குடி திரு. கும. வள்ளியப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் குமரப்பனுக்கும் அரிமழம் திரு. ப. பெ. செ. குமரப்ப செட்டியாரின் புதல்வி செல்வி தேனம்மைக்கும் 21-5-92 அன்று அரிமழத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



சேலம் கண்ணதாசன் விழாவில் கண்ணதாசன் படத்தை சேலம் மாவட்ட கம்பன் கழகத் தலைவர் திரு. என். இராமசாமி உடையார் திறந்து வைத்த காட்சி. அருகே (இ—வ) திரு. வீர. இராமநாதன். திரு. எம். நடேசன் எம். எல். ஏ., கௌசல்யா கிருஷ்ணன் திரு. புவனு ஜெயராமன் எம். எல். ஏ. நீதிபதி திரு. ஏ ஆர். லெட்சுமணன் திரு. வி. என். சிடி., திரு. வி- பழனியப்பன்.

திருச்சியில் மற்றுமொரு நகரத்தார் சங்கம்

திருச்சி கே. கே. நகர், எல்.ஐ.சி.காலனி, சுந்தர் நகர், அய்யப்ப நகர், ஆசாத் நகர், தென்றல் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகரத்தார் பெருமக்கள் ஒன்று கூடி 12-4-92 அன்று கே. கே. நகர், காமராஜர் சாலையில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் மெட்ரிகுலேஷன் பாடசாலையில் மற்றுமொரு சங்கத்தைத் தோற்றுவித்துள்ளனர். விநாயகர் பூஜைக்குப் பின் ஆத்தங்குடி திரு. பெரி. பெரிச்சியப்ப செட்டியாரின் தலைமையில் திருமதி சௌந்தரம் பெரிச்சியப்பன் திருவிளக்கேற்றி புதிய சங்கத்தைத் தொடங்கி வைத்தார். இதற்கு 'திருச்சிராப்பள்ளி கருணாநிதி நகர் ஸ்ரீகற்பக விநாயகர் நகரத்தார் சங்கம்' எனப் பெயரிட்டுள்ளனர்.

இச் சங்கத்திற்கு குளிபிறை திரு. பெரி. சி. சுப்பையா செட்டியார் தலைவராகவும் கோனபட்டு திரு. வெ. நாராயணன் செட்டியார் துணைத் தலைவராகவும் ஆத்தங்குடி திரு. பெரி. பெரிச்சியப்ப செட்டியார் செயலாளராகவும் இராயவரம் திரு. வ. பழநியப்ப செட்டியார் இணைச் செயலாளராகவும் கோட்டையூர் திரு. அழ. அழகப்ப செட்டியார் பொருளாளராகவும் மற்றும் ஏழு பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

ஆத்தங்குடி திரு. பெரி. பெரிச்சியப்ப செட்டியார் வரவேற்புரை நிகழ்த்த குளிபிறை திரு. பெரி சி. சுப்பையா செட்டியார் கூட்டத்தின் முக்கிய குறிக் கோள்களை விளக்கினர்.

உங்கள் குரல்

மே' 92 இதழ் அட்டையில் ஸ்ரீராமர் அருளாசியுடன் காட்சி தருவது அருமை. கண்ணதாசன் விழாச் செய்திகள் சிறப்பாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. சமூகச் சீர்திருத்தக் கட்டுரைகளை வெளியிட்டால் நல்லது.

நாச்சம்மை பஞ்சநதம்
காரைக்குடி

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் நம் வாழ்க்கைக்கு எவ்வாறு பயன் படுகிறது என்பதை கோவிலூர் சுவாமிகள் தம் ஆசியுரையில் அருமையாக விளக்கியுள்ளார்கள். எல்லோரும் வாங்கும் விலையில் தமிழ் நூல்களை அளிக்கவேண்டுமென்ற குறிக்கோளுடைய முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் வித்தியாசமானவர்தான்.

வ. செந்தில்
பலவான்குடி

கண்ணதாசன் விழாச் செய்திகள் மே' 92 இதழை மின்னச் செய்திருக்கிறது. அத்தனையும் முத்துக்கள் !

ஆர். வெங்கடாசலம்
சென்னை

கண்ணதாசன் விழாச் செய்திகள் கருத்தைக் கவரும் வகையில் வெளியிடப் பெற்றுள்ளன. கண்மணி சுப்புவின் பேச்சும் நடிகை மனோரமாவின் பேச்சும் கண்களைக் கலங்கச் செய்து விட்டன.

அண. இராமநாதன்
திருச்சி

திரு. எல். சுந்தரம் எழுதி வரும் 'செய்திகள் வாசிப்பவர்...' பகுதியும் 'கதம்பம்' பகுதியும் நல்ல பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. தொடரட்டும் நற்பணி.

வி. இராமையா
திண்டுக்கல்

பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களது பேட்டிக் கட்டுரையில் மணிவாசகர் பதிப்பகத்தின் சாதனைகள் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அது போல் விளம்பரம் இல்லாமல் செயல்படும் பதிப்பகங்களைப் பற்றியும் எழுதுங்கள்.

ஆர். பழநியப்பன்
சேலம்

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் அறிவிப்பு

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் மாநில அளவில் பிளஸ் டு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர் ஒருவருக்கும் மாணவி ஒருவருக்கும் அவர்களின் அறக்கட்டளையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 5,000/- வரை கல்வி நிதி உதவி வழங்க இருக்கிறார்கள். மதிப்பெண் அதிகம் பெற்றவர்கள் தங்கள் பெயர், தாயார், தகப்பனார் பெயர், சொந்த ஊர் முகவரி, பிளஸ் டு தேர்வில் பெற்ற மதிப்பெண் நகல், தற்போது சேர்ந்துள்ள கல்லூரி, படித்துவருவதற்கான அத்தாட்சிக் கடிதம் முதலியவற்றை இணைத்து செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு சென்னை 600001 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

அன்னையின் அறவுரை

வி. என். சிதம்பரம்

செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி வள்ளல்; இறப்பிலும் அறவுரை சொன்னார் எங்கள் தாயார்.

எங்களுடைய தாயார் வள்ளியம்மை ஆச்சி அவர்கள் இரக்க குணம் நிறைந்தவர். அவர் கோபமாகப் பேசி இதுவரை யாரும் பார்த்ததில்லை. குழந்தைகளை பேரன் பேத்திகளைக் கூட 'வாடா' என்றோ 'வாடி' என்றோ கூப்பிட்டுப் பார்த்ததில்லை. 'வா அப்பச்சி' 'வா ஆத்தா' என்ற வார்த்தைகள்தான் வரும். உறவினர்களிடம் மட்டுமல்ல; ஊராரிடத்தும், குறிப்பாக ஏழை எளிய அரிசன மக்களிடத்திலும் மிகுந்த பிரியத்துடன் பழகுவார்கள். நகரத்தில் இருப்பதை விரும்பமாட்டார்கள். காரணம் எங்கள் கிராமத்தில் பெரிய குடும்பம் முதல் சிறிய குடும்பம் வரை நடைபெறுகின்ற பஞ்சாயத்துகளிலெல்லாம் எங்கள் தாயார் முன்னின்று தீர்த்து வைப்பதால் ஊரில் இருப்பதையே பெரிதும் விரும்புவார்கள்.

60 ஆண்டுகளுக்கு முன்பு இராங்கியம் என்று சொன்னாலே நாட்டாருக்கு. (ஊராருக்கு) நகரத்தார்கள் அடக்கம் என்று பொருள். காதோலையைக் கழற்ற வேண்டுமென்று சொன்னால் ஒரு சிலர் காதையே அறுத்துக் கொண்டு போய் விடுவார்களாம். அப்படிப்பட்ட ஊரில் எங்கள் தாயாரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்த ஊரார், நாட்டார், அமரார், பேட்டையார், கறுப்பர் கோவிலார் என்று அணி அணியாக வந்தது இதுதான் முதல் தடவை. எங்கள் தாயாரின் அன்பிற்கு இதுதான் அளவு கோல்.

ஒரு வருடத்திற்கு முன்பு முழங்கால் வலி காரணமாக மதுரை செண்பகம் நர்சிங் ஹோமில் எங்களுடைய தாயாரை, சிகிச்சைக்காகச் சேர்ந்திருந்



வள்ளியம்மை ஆச்சி

தோம். எங்கள் குடும்ப நண்பரும் டாக்டருமான திரு. எம். ஏ. சி. எஸ். ராஜேந்திரன் 40 நாட்களுக்கு அவர்களுக்குச் சிகிச்சை அளித்தார். ஒருநாள் எங்களுடைய தாயாரைப் பார்க்க அவர் வந்தபோது எங்களது தாயார் டாக்டரை இளநீர் சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள்; டாக்டர் பதில் சொல்லாமல் இருந்தபோது "என்னுடைய மகன் தினமும் என்னைப் பார்க்க வருவான். நான்

அவனுக்கு இளநீர் கொடுப்பேன். இன்று வரவில்லை. நீங்களும் எனக்கு ஒரு மகன் மாதிரிதான் ஆகவே சாப்பிடுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார்கள். தேவையோ தேவையில்லையோ அந்தத் தாயின் மன நிறைவுக்காக டாக்டர் உடனே இளநீர் சாப்பிட்டு விட்டுச் சென்று விட்டாராம். இந்த நிகழ்ச்சி எங்களுக்குத் தெரியாது. எங்கள் தாயார் இயற்கை எய்தியவுடன் டாக்டர் திரு. எம். ஏ. சி. எஸ். ராஜேந்திரன் இறுதி அஞ்சலி செலுத்து



எம். ஏ சி. எஸ் ராஜேந்திரன்

வதற்காக இராங்கியம் வந்திருந்தார். நகரத்தார் வழக்கப்படி எங்கள் தாயாரைக் குளிப்பாட்டுவதற்காகத் தண்ணீர் எடுத்து வரச் சென்றபோது டாக்டர் அருகில் இருந்தவர்களிடம் ''இது என்ன சடங்கு? யார் யார் போக வேண்டும்?'' எனக்கேட்டிருக்கிறார். அதற்கு நச்சாந்து பட்டி திரு. பெ.ராம.ராம. லெ. கணபதி செட்டியார் 'குழந்தைகள் பேரன் - பேத்திகள் தண்ணீர் கொண்டு வரப் போவது வழக்கம்' எனக் கூறியிருக்கிறார். உடனே டாக்டர் திரு. ராஜேந்திரனும் ஒரு செம்பை வாங்கிக் கொண்டு குழந்தைகளோடு குழந்தையாக குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்தார். அங்கு இருந்த உறவினர்களிடத்திலே ஆச்சி தன்னையும் ஒரு மகனைப் பாவித்து நடத்தினர்கள் என்றும் மருத்துவமனையில் இளநீர் கொடுத்து குடிக்கச் சொன்ன நிகழ்ச்சியையும் எடுத்துக்கூறிக் குழந்தைகளோடு பட்டமும் சுற்றினர்.

டாக்டர் திரு. ராஜேந்திரன் பரம்பரைப் பணக்காரர். கைராசியானவர். 25 ஆண்டுகளாக எங்களிடம் 'பீஸ்' வாங்காதவர். தன்னுடைய உழைப்பினல் செல்வம் சேர்த்தவர். அப்படிப்பட்ட டாக்டர், எங்களது தாயார் வள்ளியம்மை ஆச்சிக்குத் தானும் ஒரு பிள்ளை என்று சொல்கிருர்என்ருல் எங்கள் தாயார் அவரை எவ்வளவு அன்போடு நடத்திருப்பார்கள் என்பதை நினைத்துப்பார்க்கிறேன். ''அன்னையைப் போலொரு தெய்வமுண்டோ'' என்ற கவியரசு கண்ணதாசன் வரிகள் நினைவுக்கு வருகின்றன. ''எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகினல் உலகமே உறவாகும்'' என்ற உயர்ந்த கருத்தை எனக்கு மீண்டும் நினைவூட்டி, இறப்பிலும் இறவாமை பெற்ற எங்கள் தாயாரை நினைத்து வழிபடுகிறேன். அவர்கள் ஆசியோடு என் பணிகள் தொடர்கின்றன.

ரோஜா முத்தையாவின் நூலகப் பேராலயம்

கோட்டையூரில் நூலகப் பேராலயம் ஒன்றை உருவாக்கி உலகம் வியக்கச் சாதனைகள் பல புரிந்து வருபவர் ரோஜா முத்தையா அவர்கள். ஒரு பெரும் பல்கலைக் கழகம் செய்யக்கூடிய இப்பணியை அந்த மாமனிதர் தனித்துச் செய்து வருவது பாராட்டுதற்குரியது.

இவர் தம் பேராலயத்தில் பல துறைகளைச் சார்ந்த நூல்கள், ஆவணங்கள், ஆராய்ச்சிக் குறிப்புகள் உள்ளன. எனினும் நாட்டுக் கோட்டை நகரத்தாரைப் பற்றி பல்லாண்டுகளாக இவர்கள் சேகரித்து வைத்துள்ள குறிப்புகள் நம்மை வியக்க வைக்கின்றன, (இதற்கென தனி கையேடு வெளியிடப் பெற்றுள்ளது)

விலை மதிக்க முடியாத இவ்விவரங்களைப் பேணிப் பாதுகாப்பது நகரத்தார் ஒவ்வொருவரின் கடமையாகும். சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பேராலயம் பற்றி பல உறுப்பினர்கள் பேசியதுடன் ரோஜா முத்தையா அவர்களிடமிருந்து மேற்படி குறிப்புகளைப் பெற்று தக்க ஓர் இடத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டுமென்றும் இது காலத்தால் செய்ய வேண்டியது என்றும் கருத்துத் தெரிவித்தனர். அதன்படி நகரத்தார் பெருமக்களின் கருத்துக்களை ஏற்று ரோஜா முத்தையா அவர்கள் அக் குறிப்புக்களைத் தர இசைந்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து நம் குலத்தைச் சேர்ந்த அம்முதியவருக்குத் தக்கதொரு விழா எடுத்துப் பொற்கிழி அளித்து அவர்கள் திரட்டிய கருத்துக்கருவூலங்களைப் பெற்றுப் பேணிக் காக்கத் திட்டமிட்டு அதற்கென ஒரு குழுவை அமைத்துள்ளனர்.

இக்குழுவிற்கு காரைக்குடி திரு. ஏ. திருநாவுக்கரசு செட்டியார் தலைவராகவும் திரு. முத்துப்



ரோஜா முத்தையா

பழநியப்பன் துணைத் தலைவராகவும் டாக்டர் திரு. ஆறு. அழகப்பன் திரு. ஆர் எம். வீரப்பன் இருவரும் செயலாளர்களாகவும் டாக்டர் திரு. வெ. பழநியப்பன் பொருளாளராகவும் திருவாளர்கள் டாக்டர் வெ. சு. அழகப்பன், டாக்டர் நாகப்ப நாச்சியப்பன் முத்தையா உடையப்பன், கவிஞர் செ. செல்லகணபதி ஆடிட்டர் சுப. குப்பான் ஆகியோர் உறுப்பினர்களகவும் பொறுப் பேற்று நிதி திரட்டி வருகின்றனர்.

அஞ்சலிக் கடிதம்

வைரமுத்து 3-5-92

15 நான்காம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம், சென்னை - 600 024

திரு வி என். சிதம்பரம் அவர்கள்
முன்னாள் தக்கார்
அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் மதுரை

அன்புடையீர்

வணக்கம்

தங்கள் அன்னையார் மறைந்து போன செய்தியறிந்து அதிர்ந்து போனேன்.

கலை இலக்கியவாதிகளுக்கெல்லாம் தாயாகத் திகழும் தங்களை ஈன்று கொடுத்த தாயார் காலமானதை எண்ணிக் கலங்கி நிற்கிறேன்.

அன்னையின் மீது நீங்கள் எவ்வளவு அன்பு கொண்டவர் என்பதை அறிந்தபோது இதயத்தின் சோகம் இரண்டு மடங்கானது. கலை, இலக்கியவாதிகளின் சார்பிலும் சமூக இலக்கியப் பேரவையின் சார்பிலும் ஆறாத உங்கள் உள்ளத்திற்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் உள்ளக் காயத்திற்குக் காலம்தான் களிம்பு தடவ வேண்டும்.

அன்னையாருக்கு என் அஞ்சலி — துயரத்தோடு

வைரமுத்து

டாக்டர் ஆறு. அழகப்பன் எம் ஏ ,எம். லிட்., பிஎச். டி.

தமிழியல் துறைத் தலைவர்
முதன்மையர் இந்திய மொழிப்புலம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

பெறுதல் :
திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள்
மதுரை

அன்புடையீர்

வணக்கம். நன்மக்களை ஈன்ற தங்கள் அருமைத் தர்யார் அமரரானார் என்ற செய்தியை ''நகரத்தார் குர''லில் கண்டு வருந்தினேன்.

ஒரு முறை என்னை அவர்களிடம் மிகப் பெருமையாக அறிமுகப்படுத்தினீர்கள்.

தோன்றிற் புகழோடு தோன்றும் தங்கள் வளர்ச்சியும் வாழ்வும் கண்டு தங்கள் தாய் மேலுலகத்திலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பொழிவாள்.

அன்பன்
ஆறு அழகப்பன்
14—5—92



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ ஐக்கிய அரபுக் குடியரசு நகரங்களான துபாய், ஷார்ஜா, அபுதாபி ஆகியவற்றில் உள்ள தமிழ் அமைப்புகளின் அழைப்பினை ஏற்று ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் 14—5—92 முதல் 19—5—92 வரை சுற்றுப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பினார்.

ஃ நாட்டரசன் கோட்டை ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் கோவிலின் வைகாசித் திருவிழா 4–6–92 வியாழன் முதல் பத்து தினங்கள் நடைபெற உள்ளது. 11–6–92 (வியாழன்) எட்டாம் திருநாளன்று வெள்ளி ரதமும் 12–6–92 (வெள்ளி) ஒன்பதாம் திருநாளன்று தேரும் திருவீதி உலாவர இருக்கின்றன.

ஃ 12-6-92 அன்று இராங்கியத்தில் நகரப் பொதுக்கூட்டமும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் அபிஷேக, ஆராதனை, அன்னதானம், இரவு சுவாமி புறப்பாடு ஆகியவையும் நடைபெற உள்ளன.

ஃ தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் காரைக்குடி நகரச் சிவன் கோவிலுக்குச் சென்றபோது அங்கு அவர்களுக்கு நகரத்தார் சார்பிலும் நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றம் சார்பிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பெற்றது.

ஃ 8-5-92 அன்று நடைபெற்ற ஆ. முத்துப்பட்டணம் அருள்மிகு லோகநாயகி அம்மன் ஆலயக் குட நீராட்டு விழாவில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நேர்முக வர்ணனை செய்தார்.

ஃ நாகபட்டினம் நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 60 பேர் 3-5-92 ஞாயிறன்று ஒன்பது

பட்டினத்தடிகள் அற்புதத் திருவிழா

காவிரிப்பூம்பட்டினத்தில் ஸ்ரீ பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா நாளது ஆங்கிரஸ ஆண்டு ஆடித் திங்கள் 18ஆம் நாள் (2—8—1992) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஆடித் திங்கள் 29ஆம் நாள் (13 - 8 —1992) வியாழக்கிழமை வரை நடைபெற உள்ளது.

நகரக் கோவில்களுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து திரும்பினர்.

ஃ கோவிலூர் ஆதீனத்தில் 6-6-92 அன்று நடைபெற உள்ள சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் ஸ்ரீ சாயிபாத சிவபிருந்தாதேவி அவர்கள் 'சிதம்பர இரகசியம்' எனும் பொருளில் சிந்தனை உரை நிகழ்த்தவிருக்கிறார்கள்.

ஃ 12-5-92 அன்று நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவிலில் தங்க அங்கி அணிவிப்பை ஒட்டி நடைபெற்ற விழாவின் நிகழ்ச்சிகளை பேராசிரியர் திரு. இராம. சிவசுப்பிரமணியமும் தலைமை ஆசிரியர் திரு. அரு. சுந்தரமும் தொகுத்து வழங்கினார்கள்.

ஃ காளையார்கோவில் ஸ்ரீசௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ சோமேசுவரர் திருக்கோவிலின் வைகாசித் திருவிழா வைகாசி மீ 21உ (3—6—92) தொடங்கி வைகாசி மீ 30உ வரை (12—6—92) நடைபெறஉள்ளது. 12-6—92 வெள்ளி இரவு தெப்பத் திருவிழா.

தேவகோட்டை வார வழிபாடு

தேவகோட்டை வார வழிபாட்டுக் கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழா 1-5-92 மாலை தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் மானேஜிங் டிரஸ்டி திரு குரு. சிதம்பரம் செட்டியார் தலைமையில், காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் முன்னிலையில் நடைபெற்றது. திரு. சோம. நாராயணன் செட்டியார் வரவேற்றார். திரு. சீனிவாசன் உரையாற்றினார். குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

ஐந்து கோவில்களுக்கும் ஒரே நாளில் குட நீராட்டு விழா

கண்டர மாணிக்கத்தில் உள்ள அருள்மிகு மாணிக்க நாச்சியம்மன் கோவில், அழகிய கண்ட விநாயகர் கோவில், முத்து முனியய்யா கோவில், சுப்பையா கோவில், மருதம் பிள்ளையார் கோவில் ஆகிய ஐந்து கோவில்களுக்கும் 9-7-92 (ஆனி மீ 25உ) வியாழக்கிழமை குட நீராட்டு விழாக்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருமணம்

தமிழ்நாடு காங்கிரஸ் குழு அலுவலகப் பொறுப்பாளர் திரு. எல். வள்ளியப்ப செட்டியாரின் புதல்வன் பழநியப்பனுக்கும், தேவகோட்டை அண்ணமலை செட்டியாரின் புதல்வி ரெங்கநாயகிக்கும் 21-5-92 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமைதாங்கி மணமக்களை வாழ்த்தினார். ரெங்கநாதப் பெருமாள் கோவில் டிரஸ்டி திரு. ரெங்கநாதன் செட்டியார் வரவேற்று நன்றி கூறினார்.



திருப்பழனி ஆண்ட கண்ணே !

ச. ஜானகி ஆச்சி, கல்லல்

சீர்மேவும் எங்கள் செல்வருக்குத் தாலாட்டப்
பார்புகழும் ஐங்கரனே பாதமலர் வந்து அருள்வாய் !
மூத்தோர் நவமணியே! மூத்தாக்கள் பொக்கிசமே !
சக்தி அருளதினால் கண்ணே நீ தானுதித்த ரத்தினமே !
திங்களணிந்தார் மகனே! திருப்பழனி ஆண்ட கண்ணே !
மங்கையிரு மாதருடன் மயில் நடனம் செய்தவனே !
அசுரர் பகையளிக்க அவதரித்த சண்முகமே !
திசையரசர் போற்றிவரச் செனித்த நவ ரத்தினமே !
மதுரை நகர் ஆண்ட மாதுமையாள் புத்திரனே !
சதுராய் அவதரித்த சக்தி வடிவேலவனே !
வேங்கை மரமாகி விநோதமிகும் கானகத்தில்
பூங்கோதை மோகமதால் போய்நின்ற புண்ணியனே !
தாயார் தகப்பனுமாய் தந்த கனி வாங்குவதற்குச்
சேயார் புவனமெல்லாம் சென்றுவந்த பாலகனே !
காவித் துணி உடுத்திக்கந்தன் பெயர் கொண்டவனே !
கலாப மயில் ஏறிக்காட்சி தந்த தேவருக்குப்
புல்விடங்கள் சுற்றி வந்த பாலகனும் நீ தானே !
சேவல் கொடியுடனே திருப்பரங்குன்றமதில்
கோதை தெய்வானையுடன் கூடி விளையாடயிலே
கோலமயில் மீதமர்ந்த குமரகுரு பண்டிதன் போல்
தானமுள்ள நேசருடன் தனித்திருந்த செண்பகமே !
மாது மனோன்மணிக்கு மைந்தன் எனப் பிறந்து
சாதுகட்குக் காட்சி தந்த சண்முகமும் நீதானே !
புத்திரப் பேர் ஓங்குவதற்குப் புகழ் பெறவே நீ உதித்து
என் நித்திரையைப் போக்கடித்த வேலவனும் நீ தானே !

துலாவூரில் சைவ சித்தாந்த வகுப்பு

நகரத்தார் பெண்கள் குரு பீடமான துலாவூர் ஆதீனத்தில் துலாவூர் நகரத்தார் டிரஸ்ட் சார்பில் ஒரு வார சைவ சித்தாந்த வகுப்பு 22-4-92 முதல் 28-4-92 முடிய சிறப்பாக நடைபெற்றது

22-4-92 காலை நிகழ்ந்த தொடக்க விழாவிற்குக் கோவிலூர் ஆதீனகர்த்தர் தலைமை தாங்கினார்கள். திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். பாதரக்குடி சுவாமிகளும், யோகி இராமையா செட்டியார் அவர்களும் ஆசி கூறினர். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஒரு வார சைவ சித்தாந்த வகுப்பு நடத்தினார்கள். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 50 பிரதிநிதிகள் பங்குபெற்றனர். திரு. சோம. நாராயணன் செட்டியார் நன்றி கூறினர்.

சைவ சித்தாந்த வகுப்பு நிறைவு விழா 28-4-92 மாலை சிறப்பாக நிகழ்ந்தது. சிவஸ்ரீ தத்புருஷ தேசிகருக்கு துலாவூர் ஆதீனகர்த்தர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். திருவாளர்கள் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன், சோம. நாராயணன் செட்டியார், சொ. மெ பழ. சோமய்யா செட்டியார், ஏஎல். எஸ். தியாகராசன் செட்டியார், புலவர் சுப்பிரமணியன், சுப்பய்யா, முத்து செட்டியார், எல். கே. முத்து முதலிய அன்பர்கள் பலர் பாராட்டிப் பேசினர். திரு. அரு. சோ. நன்றி கூறினர்.

ஆதீனகர்த்தர்களுக்கு வரவேற்பு

தேவகோட்டை ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலயத்தில் 12-5-92 அன்று கோவிலூர் ஆதீனகர்த்தர், துலாவூர் ஆதீனகர்த்தர் மற்றும் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது திரு. சோம. நாராயணன் செட்டியார் வரவேற்றார். காசிஸ்ரீ திரு அரு. சோமசுந்தரன் உரையாற்றினர். கோவிலூர் ஆதீனகர்த்தர் ஆசி உரை வழங்கினார்கள். பஜனை நடைபெற்றது.

நன்றி அறிவிப்பு

எங்கள் தாயார், இராங்கியம்

திருமதி வ. நா. வள்ளியம்மை ஆச்சி

அவர்கள் இயற்கை எய்தியதற்கு நேரில் ஆறுதல் தெரிவித்த அஞ்சலி செலுத்திய உறவினர்கள், நகரத்தார்கள், நாட்டார்கள் செட்டி நாட்டரசர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி சிகப்பி இராம சாமி அவர்கள் அமைச்சர் மாண்புமிகு எஸ் ரகுபதி அவர்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு. கே. ராஜாராம், திரு. ஆர் எம். வீரப்பன், காரைக்குடி திரு. வெங்கா, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலைச் சேர்ந்த சிவாச்சாரியார்கள், அலுவலர்கள், பணியாளர்கள், ''நகரத்தார் குரல்'' ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் தெரிவித்த நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வி. என். சிதம்பரம்
ருக்மணி சேக்கப்பன்
கமலம் வடிவேல்
சிவகாமி பழநியப்பன்
அழகம்மை சொக்கலிங்கம்

வா(ழ்)வரசி சிவகாமி ஆச்சி!

— டாக்டர் வ. தேனப்பன்

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன்-அண்ணமலை கல்லூரியை நிறுவிய வரும், இந்தியாவிலும் மலேயாவிலும் பல தொழில்களைத் தோற்றுவித்தவருமான 'வள்ளல்' உயர் திரு உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணமலை செட்டியார் அவர்களின் துணைவியார் 'வாழ்வரசி' திருமதி அண. சிவகாமி ஆச்சி அவர்கள் தமது 69ஆம் வயதில் 4-5-1992 திங்கட்கிழமை



யன்று காலை 2-30 மணியளவில் சென்னையில் இயற்கை எய்தினர் கள்.

53 ஆண்டுகளுக்கு முன். முற்றிலும் அன்பின் அடிப்படையில், மாமியார் சாமான், ஸ்ரீதனத்துக்கு முக்கியத்துவமில்லாமல் இவர்கள் திருமணம் நடைபெற்றது.

அண்ணமலை செட்டியார் அவர்கள் நிறுவிய தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள்' மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றுக்கு ஊக்க சக்தியாக ஆச்சி அவர்கள் விளங்கினர்கள். கணவருடைய தேவையறிந்து, கருத்தறிந்து அதற்கேற்றுற்போல 'வாழ்வாங்கு' வாழ்க்கை நடத்தினர்கள்.

சிவகாமி ஆச்சி அவர்களின் திருமுகத்தில் விழித்தால்போதும். அவ்வளவு மங்களகரமான மகாலெட்சுமி போன்ற திருமுகம்! அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்த கைராசிக்காரரான இவர்கள் தொட்டது துலங்கும். இவர்கள் குத்துவிளக்கு ;ஏற்றித் தொடங்கி வைத்த வங்கிகள், வணிக நிலையங்கள், மருத்துவ நிலையங்கள் ஏராளம். நடத்தி வைத்த திருமணங்களும் ஏராளமாகும்.

ஸ்ரீ சேவுகன் - அண்ணமலை கல்லூரியில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் செயலாளராகவும் ஸ்ரீ சேவுகன்-அண்ணமலை, பிரிபரேட்டரி பள்ளியில் 20 ஆண்கள் அதன் தலைவராகவும் பணிபுரிந்தார்கள். அண்ணமலை செட்டியார் அவர்கள் நிறுவிய தோட்டத் தொழில், கட்டுமானம், பேங்கிங். முதலீட்டு நிறுவனங்கள் ஆகிய யாவற்றிலும் பங்கு பெற்றுத் தொழில்துறையிலும் சிறந்து விளங்கினர்கள்.

ஏழை-பணக்காரர்கள் என்று

ஒருபோதும் பாகுபாடு காட்டாமல் எல்லோருடனும் இன்முகத்தோடு பழகி, எல்லோருக்கும் பேருதவி புரிந்திருப்பது இவர்களது தனி முத்திரையாகும்.

மக்கள், பேரன் - பேத்திகளிடம் உயிருக்கு உயிராகப் பழகி பந்த பாச ஒற்றுமையை என்றென்றும் மலர்ந்திருக்கச் செய்தவர்கள் இவர்கள்.

சென்னை திருவொற்றியூரில் நடைபெற்ற இவர்களது இறுதி யாத்திரையில் தமிழகத்தின் தலை சிறந்த தொழிலதிபர்கள், வங்கித் தலைவர்கள், பொது மேலாளர்கள், துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கை ஒரு நிறைவான வாழ்க்கையாகும். இந்த 'வா(ழ்)வரசி''யின் ஆன்மா இறைவன் திருவடியில் அமைதியும் நிறைவும் காணும்.

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் அறிவிப்பு

மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்பு, எம். காம், எம். எஸ்ஸி, எம். ஏ, எம். பி. ஏ, பி. காம், பி. எஸ்ஸி, பி. ஏ, பாலிடெக்னிக் போன்ற படிப்புக்களுக்கு திருப்பித் தரும் நிதி உதவியாகவும், மாணவிகளுக்கு மருத்துவப்படிப்பு, பொறியியல் படிப்பிற்கு திருப்பித் தரும் நிதி உதவியாகவும், மற்ற பட்டப் படிப்புகளுக்கு இலவச நிதி உதவியாகவும் 1992–93 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட இருக்கிறது. கல்வி நிதி உதவி விண்ணப்ப படிவம் வேண்டுவோர் செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தன்னை அறிய, மனமாற்றம் தேவை

மனித சக்தியால் இயக்க இயலாதது எதுவுமே இல்லை. அதற்கு இதய சுத்தம் வேண்டும். இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி மனிதன் ஏமாறுகின்றான். அதுதான் மாயை. அதன்மேல் பற்று வைத்து அதை விடாப்பிடியாக விடாமல் பற்றிக்கொண்டு நினைக்கின்றானே அது மிகக் கேவல நிலை.

நாம் மனத்தின் வழி நடக்க வேண்டுமா, அல்லது மெய்யின் வழி நடக்க வேண்டுமா என்பதை மெய்யுணர்வுடையோர்தான் உணர முடியும். ஆகாயத்தில் கப்பல் பறக்கலாம்; கப்பலுக்குள் ஆகாயம் புகுந்தால் என்ன நடக்கும்? சிந்தியுங்கள்! தன்னை அறியவேண்டுமானால் மனமாற்றத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

''மன்மனம் எங்குண்டு வாய்வும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாய்வும் அங்கில்லை
மன்மனத்துள்ளே மகிழ்ந்திருப்போர்க்கு
மன்மனத்துள்ளே மனோலயமாமே.''

என்று திருமூலர் சொல்கின்றார்.

நம் எல்லோரிடத்திலும் அன்பு இருக்கிறது. அது ஒரு வரம்புக்கு உட்பட்டது. ஆகவே, இவற்றிற்கும் மேலான அன்பருள் நோக்கு எவரிடம் உண்டு என்பதை நன்கு அறிந்து அவர்களிடம் சென்று வழிகாட்டச் செய்து வழி வகுத்துக் கொள்ள முடியும். அவர்களை நாம் தேடித்தான் காண முடியும். நம் நல்வினையால் அவர்கள் நம்மை நாடி வருவதும் உண்டு, அம்மாதிரிக்கு குருநாதர்கள்தான் இருளை அகற்றி மெய்ஒளி வாழ்வாகிய அருளை வழங்க முடியும்.

— தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீனம்.

(கோவிலூரில் 9-5-92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் ஆற்றிய ஆசியுரை.)

அஞ்சலி



தோற்றம் : 23-2-1927

மறைவு : 22-4-1992

இந்தியன் நேவியின் ஓய்வு பெற்ற அதிகாரியும்
மதுரை பிரபல நூல் வணிகரும்
நூல் வணிகர்கள் சங்கத்தின் கௌரவச்
செயலாளரும்
ஸ்ரீ வேல்முருகன் டெக்ஸ்டைல்ஸ்
உரிமையாளருமாகிய
ஒக்கூர்

மு. சே. இராமநாதன் செட்டியார்

அவர்களின் திருப்பாதங்களுக்கு
அஞ்சலி செலுத்தி அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இராம. ருக்மணி ஆச்சி - மனைவி

மகன்கள் :
இராம. கனகராஜன்
இராம ஸ்ரீதரன்

மருமக்கள் :
க. இராஜேஸ்வரி
ஸ்ரீ. மீனு

மகள் :
கண. நிர்மலா

மருமகன் :
எஸ். கணணப்பன்

பேரன்கள்:
க. அசோக்குமார், ஸ்ரீ. ராம் சரவணன்,
க. ஆனந்த், க. தினேஷ்

சீதனம் (புதுக் கவிதை)

-- முத்தையா உடையப்பன் —

சின்னஞ்சிறு வயதினிலே
சிறப்புமிகு செயல்களை செய்திடவே
சீறிப் புறப்பட்டவன் நான்
சீதனங்கள் வேண்டாம் என்றவன் நான்

எனக்கு மணம்முடிக்க என்
அன்னையும் தந்தையும் புறப்பட்டவேளை
அவர்களுக்கு என் கருத்தை வெளிக்கொணர்ந்தேன்
''சீதனங்கள் வேண்டாம், சிந்தியுங்கள் போதும்''

செட்டான என் அன்புப் பாட்டி
செல்லமாகக்கடிந்து கொண்டாளென்னை
'போடா பிழைக்கத் தெரியாத பிள்ளை,
மூன்று தங்கைகளுக்குக் கொத்தாகக் கொடுக்கவேண்டும்'

சீர்திருத்தக் கருத்துக்களைச் செம்மையாகத் தந்த
கல்வி நிலையங்களும், பல்கலைக் கழகங்களும்
பாட்டியின் பரபரப்பில் என் உள்ளத்துப்
பள்ளத்தில் பறந்துபோய் அமிழ்ந்தனவே

அன்னையும் பிதாவும் என் தெய்வம்
அவர்கள் சொல்வதே எனக்கு வேதம்
மணம் முடித்தேன் பெரும் பணத்துடன்
வந்த திருக்குலக் குணவதி ஒருத்தியை

முத்தாக முப்பது ஆண்டுகள் சிறக்க
இல்லத்தில் இன்று என்கொடி பறக்க
நன்மைக்கு என நான் சொன்னது நடக்க
திட்டமாகச் சொன்னேன் 'சீதனங்கள் வேண்டாம்' என்று

புயலாகப் புறப்பட்டாள் என் இல்லத்தலைவி
துணையாக அவளுக்கு இருபக்கப் பெற்றோரும்
இணையாக வந்தார்கள் புரட்சிக்கு எதிராக
சமனாகச் சேர்ந்தார்கள் பிள்ளைகளும் அவரோடு

''இருபிள்ளைகள் நமக்கு, இருக்காதா ஆசை எனக்கு
ஒருதலைக் கருத்தை ஒதுக்கித் தள்ளுங்கள்
கண்ணான நம் பெண்ணுக்குக் கணிசமாகக் கொடுக்கணும்
அன்பே! அமைதியாய் இருங்கள்'' என்றாள் மங்கை நல்லாள்.

சிறப்புச் சிந்தனைக்கு விழுந்த இரண்டாம் செம்மை அடி
மறுப்புக்கு இனிமேலும் மரியாதை இருக்குமா ?
எதிர்ப்பு என்னிடமிருந்து இனிமேலும் எதற்கு ?
பொறுப்போடு காத்திருப்பேன் காலம் வருமென்று !

மருமக்களும், மகளுமே மகப்பேறு பெரும்வேளை
அருகிலே வந்ததெனவே பெருமகிழ்ச்சி எனக்கு
பெரும்பாலும் என் கருத்துக்களை அமுல்படுத்தப்
பொறுப்பாக காத்திருப்பேன் அன்பான தாத்தாவாக !

திருஞானசம்பந்தர் குருபூசை

தேவகோட்டை காட்டுத் தண்ணீர்ப் பந்தலில் திருஞான சம்பந்தர் குருபூசை 19-5-92 காலை சிறப்பாக நிகழ்ந்தது. கண்டவராயன்பட்டி திரு. ஏஎல். எஸ். தியாகராசன் செட்டியார் விழாவினைத் தொடங்கி வைத்தார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் கவியரங்கம் நிகழ்ந்தது. கவிஞர்கள் வெ. பழநியப்பன், இராம. வீரப்பன், கனவு தாசன், கா நாகப்பன் கவி பாடினர். காசிஸ்ரீ திரு. வைரவன், திரு. இராம. லெட்சுமணன், திரு. காசிநாதன், திரு. செல்வ கணேசன் பக்திப் பாடல்களைப் பாடினர். தாட்டரசன்கோட்டை திரு. சுப்பையா உரையாற்றினர்.

புலவர் மாமணி உதிர்த்த நல்முத்துக்கள்

ஃ பூம்பாவை என்னும் பெண்ணின் உயிரை எழுப்புகிறபோது திருஞானசம்பந்த சுவாமிகள் ''பெருஞ் சாந்தி காணுது போதியோ பூம்பாவாய்'' என்று தேவாரத்தில் பாடியிருக்கிருர். 'பெருஞ் சாந்தி' என்ருல் 'குட நீராட்டு' என்று பொருள். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் குடநீராட்டு விழாகைக் காணுதிருப்பது கூடாது எனும் பொருளிலும் குடநீராட்டு விழாவைக் காணுதலே வாழ்வின் பயன் எனும் பொருளிலும் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியிருக்கிருர் என்பது அறிஞர் தம் கருத்தாகும்.

ஃ மீன், கண்பார்வையிலேயே தன் குஞ்சுகளைக் காப்பாற்றும். அதுபோல் தன் கண்களிஞல் அருட் பார்வை பார்த்து பக்தர்களை அன்னை காப்பாற்றுவாள். அதனுல்தான் அவளுக்கு மீன் போன்ற அட்சியை உடைய (அட்சி = கண்) 'மீனுட்சி' என்று பெயர்.

ஃ நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐந்தின் வயத்ததே உலகு. ஆண்டவனே இவ்வைந்துமாக நமக்குக் காட்சி தருகிருன். இந்த ஐந்தில் ஆண்டவனுக்கு மிக விருப்பமானது நீரும் நெருப்புமாகும். அதனுல் தான் அக்னிமூலம் ஓமம் வளர்த்து யாகசாலை வழிபாடும் அதனையடுத்து யாகசாலையில் உருவேற்றப்பட்ட கடக நீரில் குடநீராட்டும் நடைபெறுகிறது.

ஃ பாண்டிய நாட்டில் பாண்டிய மன்னர்கட்கு அடுத்துஆலயத் திருப்பணிகளைச் செய்தவர்கள் நகரத்தார்கள். பாண்டியரின் பூ வேப்பம்பூ. நகரத்தார் ஊராகிய ஆ. முத்துப் பட்டண லோகநாயகி அம்மன் கோவிலில் தல விருட்சம் வேம்பு ஆகும். இப்படிச் சிற்சில ஒற்றுமைகள் பாண்டிய மன்னர் கட்கும் நகரத்தாருக்கும் இருந்து வந்திருக்கிறது.

(ஆ. முத்துப்பட்டணம் அருள்மிகு லோகநாயகி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டு விழாவில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் செய்த நேர்முக வர்ணனையிலிருந்து)

வேந்தன்பட்டி நந்தீஸ்வரர்

பாண்டிய நாட்டிலே புதுக்கோட்டை மாவட்டத்தில் நல்ல நீர்வளமும் நிலவளமும் கன்னலும் செந்நெலும் சோலைகளும் சூழ இயற்கை அழகு தெய்வம் கொலு வீற்றிருக்கும் சிற்றூர் வேந்தன்பட்டி ஆகும். இவ்வூரில் அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் சிவாலயத்தில் காண்போர் கண்களையும் கருத்தையும் கவரும் கவினுறு மகிமையுடைய நந்தீஸ்வரர் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

வேந்தன்பட்டியானது கிழக்கே துர்க்கை செட்டிப் பிள்ளையாரையும் மேற்கே மாப்படைச்சான் பிள்ளையாரையும் வடக்கே பெரிய பிள்ளையாரையும் தெற்கே ஆறுமுகம் செட்டி பிள்ளையார் கோவிலையும் எல்லைகளாகக் கொண்டு திகழ்கின்றது. இங்கு சுமார் 600 நகரத்தார் குடும்பத்தினர் உள்ளனர்.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதற்கேற்ப நகரத்தார் பெருமக்கள் தங்களது ஊர்களில் சிவாலயங்களை அமைத்துத் தவறாது வழிபட்டு வந்தனர். அவ்வாறே சிவாலயம் எழுப்ப, வேந்தன்பட்டி நகரத்தார்கள் 1907ல் திட்டமிட்டு சிவாலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஆளுகைக்குட்பட்ட கொடும்பாளூர் சிவன் ஆலயம் ஒன்றிலிருந்து லிங்கத்தையும் நந்தியையும் கொண்டுவருவது எனத் தீர்மானித்து புதுக்கோட்டை மாமன்னரிடம் அனுமதியும் பெற்றார்கள். அதன்படி ஆகம விதிப்படி பூஜை செய்து பெரிய நந்தியை எடுத்து சப்பரத்தில்



வேந்தன்பட்டி நந்தீஸ்வரர்

படம் உதவி: திரு. வி. முத்துராமன், வேந்தன்பட்டி

கொண்டு வந்தபோது அச்சு முறிந்து அது வழியில் உட்கார்ந்து விட்டது. பின்பு மீண்டும் விடா முயற்சியுடன் மற்றுமொரு நந்தியை ஏற்றி வேந்தன்பட்டி கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்த நந்தீஸ்வரர்தான் இக் கட்டுரையில் காட்சி தருகிருர்.

கொடும்பாளூரில் நடுவில் இருந்த லிங்கம் வேந்தன்பட்டியில் சொக்கலிங்கேஸ்வரராகவும் முதல்கோடியில் இருந்த லிங்கம் பொன். புதுப்பட்டி சிவன் கோவிலில் பூலோகநாதராகவும் கடைசிக் கோடியில் இருந்த லிங்கம் ஆ. தெக்கூர் சிவன் கோவிலில் சுந்தரேஸ்வரராகவும் பிரதிஷ்டை செய்யப்பெற்று அருள்பாலிக்கின்றன.

வேந்தன்பட்டியில் திடீரென்று ஏற்பட்ட ஒற்றுமைக் குறைவால் பெருமுயற்சியோடு கொடும்பாளூரிலிருந்து கொண்டு வரப்பட்ட நந்தியைக் கவனியாது ஒரு சில ஆண்டுகள் அப்படியே குளத்தில் வைத்து விட்டனர். எனவே நாளுக்கு நாள் ஊரில் சண்டை சச்சரவுகளும் வாந்தி பேதி போன்ற கொடிய நோய்களும் பரவின. பின்பு ஊர் மக்களில் பலருக்கு அருள் வந்து "நந்தி தேவரை வேண்டிப் பணிந்தபடி பணிவிடை செய்தால் நாம் நலம் பெறலாம்" என்று கூற கோவில் திருப்பணிகளும் வேகமாக நடைபெற்று நந்தி எம்பெருமானையும் முறைப்படி பிரதிஷ்டை செய்து வேண்டுதலின்படி பசு நெய்யை நாள் தோறும் சொரிந்தார்கள்.

இந்த நந்தி எம்பெருமான் மீது இன்றளவும் சாத்தப்பெறும் பசு நெய்யில் எந்த விதமான ஈ, எறும்பு, புழு, பூச்சிகள் நெருங்காதிருப்பது மிகவும் வியக்கத் தக்கதாகும். அது மட்டுமல்லாது நந்தி எம்பெருமானுக்கென்று வீடுகளில் தனியாக எடுத்துவைக்கப்பெறும் பசு நெய்யில் ஈ, எறும்பு அண்டுவதில்லை.

ஒருமுறை அர்ச்சகர் ஒருவர் நந்தியின் மீது படிந்துள்ள அதிகமான நெய்யை வழித்தெடுத்து



சேலம் கண்ணதாசன் விழாவில் நடைபெற்ற கவியரங்கத்தில் தலைவர், பாடலாசிரியர் திரு. நா. காமராசனும் அருகே கவிஞர்கள் தாரமங்கலம் வேலு, கா. முத்துமணி, கண்மணி சுப்புவும் உள்ளனர்.

கோவில் தீபங்களுக்கு ஊற்ற அவை முழுவதும் இரத்தமாக மாறி விட்டதாம். பின்பு குருக்கள் கனவிலே நந்தீஸ்வரர் காட்சி தந்து ''நம் மீது சாத்தப் பெறும் அதிகமான நெய்யைத் தொட்டி கட்டி அதில் சேர்த்து பூமா தேவிக்கே (மண்ணுக்கே) அர்ப் பணிக்க'' எனத் திருவருள் கொடுக்க, அவ்வாறே கேணி போன்று பெரிய அளவில் தொட்டி கட்டி மிகுதியான நெய்யை இன் றும் அத்தொட்டியிலேயே சேர்த்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பாக ஆச்சாரியாரின் மகன் ஒருவன் நந்தி எம்பெருமானின் மேனியில் எவ்வளவு கனத்திற்கு நெய் சாத்தப் பெற்றிருக்கிறது என்பதை அறியும் பொருட்டு — பலர் தடுத்தும் கேளாமல் - தனது விரலை நந்தியின் மேனியில் பல் வேறு இடங்களில் அழுத்திப் பார்க்க பின்பு அவனது அவ்விரல் அழுகிவிட்டதாகக் கூறப் பெறு கிறது.

எனவே அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு யாரும் நந்தி எம்பெரு மானைத் தொடாமல் இருக்கும் வண்ணம் நந்தி எம்பெருமானைச் சுற்றி நான்கு பக்கமும் தடுப்பு வேலி போடப் பட்டுள்ளது.

இவ்வாறாக பல நலன்களையும் நாளும் நல்கி வரும் நந்தி எம்பெருமானை வணங்கிப் பயன் பெறுவோம்.


(வலையபட்டி திரு. சண்முகம் எழுதிய கட்டுரையிலிருந்து)

பூச்சொரிதல் விழா

கண்டவராயன்பட்டி காளியம்மன் கோவிலின் 49ஆவது பூச்சொரிதல் விழா 17-5-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் நிகழ்ந்த ஆன்மீகப் பேரவையினை திரு. ஏஎல். எஸ். தியாகராசன் செட்டியார் தொடங்கி வைத்தார். திரு. கருப்பையா செட்டியார் வரவேற்றார். பொற்கிழிக் கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் ''ஸ்ரீ கிருஷ்ணர் தூது'' பற்றி உரையாற்றினர். திருச்சி நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எஸ். ஓ. ஆர்எம். கணபதி செட்டியார் நன்றிகூறினர். திரு. செல்வ கணேசன் பக்திப் பாடல்களைப் பாடினர்.

மறுநாள் நிகழ்ச்சிக்கு திரு. சோம. நாராயணன் செட்டியார் தலைமை தாங்கினர். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ''சைவ சமய நெறி'' பற்றி உரையாற்றினர். இருநாள் நிகழ்ச்சிகளையும் உபயம் செய்த திரு. ஏஎல். எஸ். தியாகராசச்செட்டியாருக்குப் பாராட்டுத் தெரிவிக்கப் பெற்றது.

அருணகிரிநாதர் ஜெயந்தி விழா 13-7-92 & 14-7-92 ஆகிய இரு தினங்களும் மதுரை தெற்கு ஆடிவீதியில் உள்ள திருப்புகழ் சபையில் நடைபெற உள்ளது.



துலாவூர் ஆதீனத்தில் ஒரு வாரம் சைவ சித்தாந்த வகுப்பு நடத்திய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு நிறைவு நாள் விழாவில் நகரத்தார் மரியாதை செலுத்தியபோது எடுத்தபடம். படத்தில் (இ-வ) திரு. வெஸ்ட் வயிரவன் செட்டியார், துலாவூர் சுவாமிகள் திரு ஏஎல் எஸ். தியாகராஜன் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார், 'காசிஸ்ரீ' திரு. அ ந. சோ. உள்ளனர்.

காரைக்குடி நகர விடுதி

'காரைக்குடியில் நகர விடுதி இருக்கிறதா?' எனப் பலரும் கேட்கின்றனர். காரைக்குடியில் நகர விடுதி திறந்து வைக்கப்பட்டு சுமார் 17 மாதங்கள் ஆகின்றது.

காரைக்குடியில் சிவன் கோவில் அருகே மேல வடம் போக்கித் தெருவில் கிணற்றடி காளியம்மன் கோவில் எதிரே அது சிறப்பாக இயங்கி வருகிறது. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம் அதை நிர்வகித்து வருகிறது.

அங்கு ஆண்கள் பெண்கள் தங்கி இருப்பதற்கு எல்லாச் சௌகரியங்களும் உள்ளன. அங்கு தங்குவதற்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு மகமை ரூ. 2-00. லாக்கர் வாடகை ரூ. 1-00 (24 லாக்கர்கள் பெரிய அளவில் உள்ளன.)

இது தவிர நாள் ஒன்றுக்கு ரூ. 7-00 வாடகையில் இரு அறைகளும் நாள் ஒன்றுக்கு ரூ. 10-00 வாடகையில் (குளியல் அறை இணைந்தது) ஒரு அறையும் உள்ளது.

நகர விடுதிக்குள் ஸ்ரீ காசி விநாயகர் கோயில் உள்ளது. மிகவும் சக்தி வாய்ந்தவர் இந்த விநாயகர். இவருக்குத் தினமும் இரு வேளை பூஜை நடைபெறுகிறது. விசேட நாட்களில் பாலாபிஷேகமும் சதுர்த்தி தினங்களில் அபிஷேகமும் நடைபெறுகின்றன. இவற்றை இந்த நகர விடுதியின் பொறுப்பாளர் தேவகோட்டையைச் சேர்ந்த திரு. எஸ். ஆண்டப்ப செட்டியார் ஆர்வமுடன் செய்து வருகிறார்.

கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப் பூங்காவின் எட்டாவது கூட்டம் 9-5-92 அன்று காலை இனிதே நிகழ்ந்தது. கோவிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீகாசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். திரு. யோகி இராமையா செட்டியார் 'சிவயோக சித்தாந்தம் அன்றும் இன்றும்' என்பது பற்றி உரையாற்றினார். அமெரிக்கா, ஆஸ்திரேலியா அர்ஜென்டைனா மற்றும் செட்டி நாடு பகுதிப் பிரமுகர்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.

பிறந்தநாள் விழா

கானாடுகாத்தான் திரு. யோகி இராமையா செட்டியாரின் 69 ஆவது பிறந்த நாள் விழா காரைக்குடி கிரியா பாபாஜி யோக சங்கக் கிளையில் 9-5-92 மாலை நடைபெற்றது. காசிஸ்ரீ திரு அரு. சோமசுந்தரன் வாழ்த்துரை வழங்கினார். விழாவில் வெளிநாட்டு அன்பர்களும் கலந்து கொண்டனர்.

திருமணம்

செவ்வூர் திரு. கும. ஆ. ராம. ஆண்டியப்ப செட்டியார் புதல்வி செல்வி சொர்ணலதா B.Sc, M.A., க்கும் உலகம்பட்டி திரு. சி. லெ. நா. லெட்சுமணன் செட்டியார் புதல்வன் செல்வன் திருநாவுக்கரசு B.Com, I. C. W. A (C. A.) க்கும் 15-4-92 அன்று செவ்வூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நூல்களின் அருமை

— ரோஜா முத்தையா —

''நகரத்தார் குரல்'' பிப்ரவரி' 92 இதழில் 36 ஆம் பக்கத்தில் திரு. பழ. கருப்பையா அவர்கள், காரைக்குடி சுழற்குழுக் கூட்டத்தில் ''வீட்டின் மதிப்பும் நூல்களின் மதிப்பும்'' என்ற தலைப்பில் பேசிய கீழ்க்கண்ட செய்தி வெளிவந்துள்ளது :-

''என் தங்கை பத்தாண்டுகளுக்கு முன்பு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு வாங்கிய வீடு, இன்று ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புடையதாக இருக்கிறது. நான் பத்தாண்டுகளாக ரூபாய் மூன்று இலட்சத்திற்கு வாங்கியுள்ள நூல்களை இன்று மூவாயிரம் ரூபாய்க்குக் கூட யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்''

இப்படிப்பட்ட பேச்சுகள் புத்தகப் பிரியர்களையும், புத்தகம் சேகரிப்பவர்களையும் உற்சாகம் இழக்கச் செய்பவை. ஆனால், அதே சமயத்தில் பழைய தமிழ் நூல்களின் அவல நிலைமைகளைக் குறிப்பிடுவதாகவும் அதைக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களோ, தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களோ பழைய தமிழ் நூல்கள் சேகரிப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை. ஏனெனில் அவர்களுக்கு அவைகளின் அருமை தெரிவதில்லை!

ஆனால் வெளிநாட்டவர்கள் தமிழ்ப் புத்தகங்களின் அருமை தெரிந்தவர்கள் நல்ல தமிழ் நூல்களையும், அரிய தமிழ் நூல்களையும் நல்ல விலை கொடுத்து வாங்கக் கூடியவர்கள்.

ஓவியங்கள். கலைப் பொருள்கள், அரிய நூல்கள் இவைகள் எல்லாம் விலை மதிப்பற்ற செல்வங்கள். புத்தகங்களின் அருமை பெருமைகள் பற்றி பெரியவர்கள் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலேயப் பெருமக்கள் ''நாங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜியத்தையே இழக்கத் தயார்; ஆனால் ஷேக்ஸ்பியரை இழக்கச் சம்மதிக்க மாட்டோம்'' என்று சொல்லுவார்கள்.

புத்தகங்களோ, ஓவியங்களோ, கலைப் பொருள்களோ சேகரிப்பவர்கள் திரு. கருப்பையா அவர்களின் பேச்சினால் உற்சாகம் இழந்துவிடக்கூடாது என்ற ஒரு காரணத்திற்காகவே கீழே கண்ட சில விஷயங்களைக் குறிப்பிடுகிறேன்.

சர் அலெக்சாண்டர் பிளெம்மிங், பென்சிலின் மருந்து பற்றி 1929-ல் ஒரு ஆங்கில மருத்துவ இதழில் ஒரு கட்டுரை எழுதினார். அதனுடைய மொத்தப் பக்கங்கள் 10. 1967 - ல் மேற்படி கட்டுரை ஐயாயிரம் பவுனுக்கு விற்கப்பட்டது. இன்று அந்தக் கட்டுரையின் மதிப்பு எத்தனையோ இலட்சங்கள்! (ஆதாரம் : THE PRACTI-

TIONER, VOL - 199, JULY - DECEMBER, - 1967, PAGE-587)

காரல் மார்க்ஸ் எழுதிய ''கம்யூனிஸ்ட் மானி பெஸ்ட்டோ'' என்ற 28 பக்கங்கள் உள்ள நூல் ஒன்று அண்மையில் இலண் டனின் ஒரு ஏலக் கம்பெனியில் சுமார் 13 இலட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டது! (ஆதாரம் : 1–6–86 – INDIAN EXPRESS).

15 ஆம் நூற்றாண்டில் அச்சிடப்பட்ட பைபிள் புத்தககம் ஒன்று அண்மையில் 160 இலட்ச ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது! (ஆதாரம் 9–4–78. தினமணி).

அமெரிக்காவில் லியோபால்டு என்பவர் பதினாயிரக் கணக்கில் சிரிப்புத் துணுக்குகளை பல பத்திரிகைகளிலிருந்து எடுத்துத் தொகுத்து வைத்திருந்தார். அதை ரூபாய் ஏழு இலட்சத்து ஐம் பதாயிரம் கொடுத்து வாங்குவதற்கு கலிபோர்னியாவில் உள்ள இரண்டு பல்கலைக் கழகங்கள் முயற்சி செய்தன. (ஆதாரம்: BEAUTIFUL, VOL-1, NO-7, FEB–1975, பக்கம்-28)

1976 – ல் டில்லியில் நடைபெற்ற இரண்டாவது புத்தகச் சந்தையில் 150 புத்தகங்கள் 3 இலட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டன. (ஆதாரம் : 1–2–76, தினமணி சுடர், பக்கம்-2) (இவைகளில் பெரும்பகுதி தமிழ்ப் புத்தங்கள் என்று கேள்விப்பட்டேன்.)

பிரபல ஓவியர் பிக்காசோ என்பவர் எழுதிய ஓவியம் ஒன்று ரூ. 72 கோடிக்கும், இன்னொரு ஓவியம் ரூ. 58 கோடிக்கும் வாங்கப்பட்டன. (ஆதாரம் முறையே : 12–5–89, தினமலர், பக்கம்-3, — 30–11–88 தினமணி, பக்கம்-8).

சுத்தியல் கேட்டு சுற்றி வந்த பையன்!

வீட்டுச் சுவரில் படம் மாட்ட ஆணி அடிக்க வேண்டியிருந் தது. தந்தை, மகனை அழைத்து ''ஆணி அடிக்க எதிர் வீட்டில் சுத்தியல் வாங்கி வா'' என்றார். எதிர்வீடு சென்ற பையன் ''இல்லையாம்'' என்றபடியே வந்தான். ''சரி, அடுத்த வீட்டில் கேள்'' என்றார். ''அவர்களும் இல்லை என்று சொல்லிவிட் டார்கள்'' என்று திரும்பிவந்து சொன்னான். ''இந்த வீதியில் எத்தனை வீடுகள் இருக்கின்றதோ அங்கெல்லாம் கேட்டுப் பார்'' என்றார். எல்லா வீடுகளுக்கும் சென்று வந்த அவன் ''அப்பா ஒருவரும் சுத்தியல் தரவில்லை'' என்றான். உடனே தந்தை தன் மகனைப் பார்த்து ''அவங்க கிடக்கிறாங்க, கஞ்சப் பசங்க! நம்ம வீட்டுச் சுத்தியலை எடுத்து வாடா'' என்றார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(பாளையங்கோட்டையில் 7–4–92 அன்று நடைபெற்ற அரிமா சங்க விழாவில்)

சிவதீட்சை விழா

திருநெறிய தமிழ் மன்றம் இரண்டாவது முறையாக நடத்திய சிவதீட்சை விழா 1-5-92 அன்று விசாலாட்சி நகரில் சிறப்பாக நடந்தேறியது. தேவகோட்டை சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், நகரத்தார் ஆண்கள், பெண்கள் உட்பட திரளான மெய்யன்பர்களுக்கு உபதேசம் செய்வித்தார்கள். அவ்வமயம் தொழிலதிபர் திரு. லெ. நா அவர்கள் வாழ்த்துரை வழங்கி ஆசி கூறினார்கள். விழாவின் இறுதியில் அனைவருக்கும் அறுசுவை விருந்து, ஆலை நிர்வாகத்தின் சார்பில் அளிக்கப்பட்டது. திருநெறிய தமிழ் மன்ற அமைப்பாளர் திரு வெ. மு. மா. மெய்யப்பன் நன்றி கூறினர்.

மன்றத்தின் சார்பில் அடுத்த சிவதீட்சை விழா 8-7-1992 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருக்கிறது. அதில் கலந்து கொண்டு சிவதீட்சை பெற விருப்பமுள்ளவர்கள் திரு. வெ.மு.மா. மெய்யப்பன் அமைப்பாளர், திரு நெறிய தமிழ் மன்றம், விசாலாட்சி நூற்பாலை. விசாலாட்சி நகர் - 625 401. என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். (தொலை பேசி : 37066).

திருமணம்

ஒக்கூர் திரு. மு. சே. ரெ. சேக்கப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் கண்ணப்பன் B. E., M. S. க்கும் பலவான்குடி திரு. மூரு. க அரு கருப்பையா செட்டியார் புதல்வி செல்வி சாந்தி (B. E.) க்கும் 21-5-92 அன்று பலவான்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரி முதல்வர் பூலாங்குறிச்சி திரு. அள. சொ. ச. சொக்கலிங்கம் செட்டியாரின்புதல்வன் செல்வன் சண்முகசிவா B. E. க்கும் குழிபிறை திரு. செ. ராம. அ. சேதுராமன்செட்டியாரின் புதல்வி செல்வி தெய்வானை B. A. க்கும் 21-5-92 அன்று குழிபிறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.


ஃ ஃ ஃ

பாகனேரி திரு ராம. லெ. ராம. ராம. சங்கர நாராயணன் செட்டியார் புதல்வன் செல்வன் கண்ணப்பனுக்கும் பி. அழகாபுரி திரு அரு. சுப. வே. அழகப்ப செட்டியார் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் 21-5-92 அன்று பி. அழகாபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சுழற் குழுத் தலைவராக என். நாராயணன்

இராயவரம் திரு. இராம. நா. நாராயணன் செட்டியார் குமாரர் திரு. நா. நாராயணன் B. Sc , கிருஷ்ணகிரி சுழற் குழுத் தலைவராக 1992 - 93 ஆம் ஆண்டுக்குத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார். அவருக்கு நமது நல்வாழ்த்துக்கள். ஆட்டோமோபைல்ஸ் தொழிலைச் செய்து வரும் இவர், பல்வேறு சமூகப் பணி அமைப்புகளில் ஈடுபட்டு சேவை செய்து வருகிறார்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி.என். சிதம்பரம்.



ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட். நிர்வாக இயக்குநர் திரு. இராம. அருணசலம் அவர்களது புதல்வி மெய்யம்மை என்ற விஜயா B A.க்கும் தேவகோட்டை திரு சேவு. லெ. ராம. நா. ராம. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வன் வெள்ளையன் B.E. க்கும் 14—5—92 அன்று பள்ளத்தூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.